**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

STC No. 1185 /2015

PW-3 18-06-2024

| | |
|---|---|
| Name | சேகர் |
| Father's/Husband's Name | ராமசாமி |
| Village | கயத்தார் |
| Taluk | கயத்தார் |
| Caste | – |
| Calling | வாழைக்காய் வியாபாரம் |
| Religion | – |
| Age | 51 |

(Accused absent. Petition filed and allowed)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் கயத்தாரில் வசிக்கிறேன். நான் வாழைக்காய் வியாபாரம் செய்கிறேன். அசா 1 முத்துவிநாயகம் என் மனைவியின் தம்பியாவார். அசா 2 ஐ தெரியாது. எதிரியை தெரியாது. 03.10.2015 ம் தேதி நான் கடையில் 3.30 மணியளவில் வாழைக்காய் வியாபாரம் செய்துகொண்டிருக்கும்போது முத்துவிநாயகம் எனக்கு போன் செய்து அரசு பேருந்து அவர் மீது இந்திராநகர் அருகே சாய்பாபா கோவில் பக்கத்தில் இடித்துவிட்டதாக கூறினார். அதில் அவருக்கு வலது தோள்பட்டை கை, கால் , பாதம் ஆகியவற்றில் காயம் இருந்தது.

2) தகவல் கிடைத்தவுடன் நானும் என் மனைவியும் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அன்று சுமார் 4.30 மணிக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நான் அவரை சிகிச்சையில் சேர்ப்பதற்கு உதவியாக இருந்தேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு நான் நேரடியாக செல்லவில்லை. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அசா 1 என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.